செ.வெ.எண். 20 நாள்: 20.06.2020

**பெரம்பலூர் மாவட்டம்**

**பெரம்பலூர் மாவட்டத்தில் தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தில் பதிவுபெற்ற தொழிலாளர்களுக்கு ஆட்சித்தலைவர் திருமதி.வே.சாந்தா இ.ஆ.ப., அவர்கள் பாதுகாப்பு உபகரணங்களை வழங்கினார்.**

**அதன் விபரம் வருமாறு:**

தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் பெரம்பலூர் மாவட்டத்தில் பதிவுபெற்ற கட்டுமானம், உடலுழைப்பு மற்றும் ஆட்டோ தொழிலாளர்கள் நல வாரியத்தில் 46277 உறுப்பினர்கள் பதிவுபெற்றுள்ளனர். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கொரோனா வைரஸ் நோய் பரவுதலை தடுக்கும் பொருட்டு பொது முடக்கத்தை முன்னிட்டு பதிவு பெற்ற கட்டுமானம், உடலுழைப்பு மற்றும் ஆட்டோ தொழிலாளர்களுக்கு கொரோனா நிவாரண உதவியாக தலா ரூ.2000 மற்றும் உணவுத் தொகுப்பாக (15 கிலோ அரிசி, 1 கிலோ பருப்பு மற்றும் 1 லிட்டர் சமையல் எண்ணைய்) வழங்க உத்தரவிடப்பட்டதை தொடர்ந்து இவ்வலுவலகத்தின் வாயிலாக முறையே 24051 பயனாளிகளுக்கு ரூபாய் 2000/-ம் 17419 பேருக்கு உணவுத் தொகுப்பும் வழங்கப்பட்டுள்ளது.

கட்டுமான பணியிடங்களில் தொழிலாளர்களின் பாதுகாப்பினை உறுதிசெய்யும் வகையில் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்தில் பதிவுபெற்ற தொழிலாளர்களுக்கு தலா ரூ.2000/- மதிப்புள்ள பாதுகாப்பு உபகரணங்கள் கொண்ட பெட்டகங்கள் வழங்கப்படும் என உத்தரவிடப்பட்டுள்ளதை தொடர்ந்து தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரிய செயலாளர் அவர்களின் குறிப்பாணையின்படி பெரம்பலூர், தொழிலாளர் உதவி ஆணையர் (ச.பாதி) அலுவலகத்திற்கு 303 (தலைக்கவசம், கையுரை, கண்கண்ணாடி, காலணி, பாதுகாப்பு மேலாடை) தொழிலாளர்களுக்கான பாதுகாப்பு உபகரணங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி, ஒதுக்கீடு செய்யப்பட்ட உபகரணங்களை பயனாளிகளுக்கு பெரம்பலூர் மாவட்ட ஆட்சியரகத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.வே.சாந்தா இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.ராஜேந்திரன், தொழிலாளர் நல உதவி ஆணையர் (ச.பா.தி) திரு.முகமது யூசுப் மற்றும் பலர் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், பெரம்பலூர்.**